# தமிழ் வளர்ச்சிக் கழகம்

## செய்தி மின் மடல்

தனிச் சுற்றுக்கு மட்டும்
2 : 9 அக்டோபர் 2026

### உங்களுடன்

கடந்த 26/9/26 அன்று நடந்த
அறங்காவலர் ஆட்சிக்குழுக் கூட்ட
மகிழ்ச்சி அதிர்வுகள்
மனதில் இப்போதும்!

தமிழ் வளர்ச்சிக் கழகக் கணக்கில்
ஒரு கோடி ரூபாய் புரவலர் நிதி!

சாதனைக்கு உரிய
மேனாள் ஒன்றிய அமைச்சர்,
அறங்காவலர் குழுத் தலைவர்
மாண்பமை ப.சி. அவர்களைச்
சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளர்
பேராசிரியர் முனைவர் ரீட்டா ஜான்
தொடங்கி
அறங்காவலர் குழு உறுப்பினர்களும்
ஆட்சிக்குழு உறுப்பினர்களும்
மனம் நெகிழ்ந்து பாராட்டி
மகிழ்ந்த மகிழ்ச்சி அதிர்வுகள்
இப்போதும் மனதில்!

கூடிக் கலையும்
கூட்டமாக இல்லாமல்
தமிழ் வளர்ச்சிக்குத்
தற்போது தேவைப்படும்
பணிகள் குறித்து
பொறுப்புணர்வோடு
கருத்துகள் வெளிப்பட்டன.

வளர்ந்து வருகிற
இளைஞர்கள் மட்டுமின்றி
வளர்ந்து நிற்கும்
பெரியவர்களிடமும்
தமிழ் உச்சரிப்பின் நிலை
கவலை தருகிறது என்றும்,
தமிழ் வளர்ச்சிக் கழகம்
சீரமைக்க முன்வர வேண்டும் என்றும்
தெரிவிக்கப்பட்ட கருத்தினைக்
கருதிப் பார்த்து
நடவடிக்கை தொடரப்பட வேண்டும் என்ற
அறங்காவலர் குழுத் தலைவர்
அறிவிப்பினைக் கூட்டம்
ஒருமனதாக ஏற்றது.

நினைத்துப் பார்த்தால்
வியப்பாக இருக்கிறது.
இந்தச் சிக்கல்
தொல்காப்பியர் காலத்திலும்
இருந்திருக்கும் போல

எழுத்துகளை எப்படி
உச்சரிக்க வேண்டும் என்று
பிறப்பியலில்
நாக்கு, உதடு, பல், அண்ணம் என்று
எழுத்துகளின் பிறப்பிடத்தையும்
பிறக்கும் முறையையும்
சொல்லிச் சென்றிருக்கிறார்.

ண, ந, ன,
ழ, ள, ல,
ர, ற ஆகிய
தமிழ் எழுத்துகளை
உச்சரிப்பதில் ஏற்படும்
பிழைகளைக் களைவது
இப்போது
பேசுவதைச் சரியாகத்
தட்டச்சு செய்யத் தேவைப்படுகிறது
இணையத் தமிழுக்கும்.

சிக்கலுக்குத் தீர்வு காண
செய்யறிவின் உதவியோடும்
தமிழ் அறிஞர்களின் ஒத்துழைப்போடும்
பணிகளைத் தொடர
உங்களுடன்...

ம.ரா.

## அறங்காவலர் மற்றும் ஆட்சிக்குழுக் கூட்டம்

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் அறங்காவலர் மற்றும் ஆட்சிக்குழுக் கூட்டம் 26.09.2026 அன்று முற்பகல் 10.30 மணிக்குத் தொடங்கி நடைபெற்றது. இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் அறங்காவலர் குழுத் தலைவரான மேனாள் ஒன்றிய அமைச்சர் மாண்பமை ப. சிதம்பரம் அவர்கள் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் அறங்காவலர் குழுவில் முனைவர் ம. இராசேந்திரன், டாக்டர் கிருஷ்ணசந்த் சோர்டியா, பேராசிரியர் சா. சரவணன், பத்மபூஷன் திரு. நல்லி குப்புசாமி, திரு. எஸ். இராமகிருஷ்ணன், டாக்டர் சாரதா நம்பி ஆரூரன் ஆகியோரும், ஆட்சிக்குழுவில் டாக்டர் கிருஷ்ணசந்த் சோர்டியா, மேனாள் துணைவேந்தர் காளிராஜ், திரு எஸ். இராசரெத்தினம், இ.ஆ.ப. (ஓய்வு), பேராசிரியர் ரீட்டா ஜான் (பதிவாளர், சென்னைப் பல்கலைக்கழகம்), பேராசிரியர் சா. சரவணன், முனைவர் ஒப்பிலா மதிவாணன், திரு சிவாலயம் ஜெ. மோகன், முனைவர் உலகநாயகி பழனி, முனைவர் வாசுகி கண்ணப்பன், முனைவர் உரு. இராசேந்திரன், முனைவர் விஜயலட்சுமி இராமசாமி, ஆகியோரும் கலந்து கொண்டனர்.



## குறிச்சொல் களஞ்சியம் கூட்டம்

தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் 02.09.2026 அன்று தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்கள் தலைமையில் குறிச்சொல் களஞ்சியப் பணி குறித்த கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேரா. சா. சரவணன், திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ. மணவழகன்,பேரா. ஒப்பிலா மதிவாணன், பேரா. ம. இளங்கோவன், பேரா. சிவ. முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறிச்சொல் களஞ்சியப் பணியின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ. மணவழகன் அவர்கள் இப்பணி குறித்த முன்னேற்ற நிலையை விளக்கினார்.

1. புறநானூறு, அகநானூறு, ஐங்குறுநூறு நூல்களில் உள்ள குறிச்சொற்களின் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.
2. குறிச்சொற்களைப் பயன்பாட்டு உத்திகள், இடப் பெயர்கள், ஊர்ப் பெயர்கள், ஆட்சியியல், போரியல், பறவையியல் போன்ற பொருண்மைகளின் அடிப்படையில் தொகுப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

3. தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர், குறிச்சொல் களஞ்சியத்தை அச்சுப் பிரதியாக்கும் பொழுது அகர வரிசையில் அமைத்து அடைப்புக் குறிக்குள் பொருண்மைத் தலைப்பைக் குறிப்பது என்று ஆலோசனை வழங்கினார்.

4. திணை, துறை நோக்கில் மட்டுமல்லாது பாட வேறுபாடு, உரை வேறுபாடுகள் அடிப்படையிலும் நோக்குதல் வேண்டும் என்பதாகவும் ஆலோசிக்கப்பட்டது.

5. குறிச்சொல்லுக்கான பொருட்பயன்பாட்டு அடிப்படையில் உலோகவியல், வானியல், நிலவியல், கட்டடவியல் பொருண்மைகளை வகைப்படுத்தலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

6. கலைகள், பொருண்மையியல், கலைஞர்கள், கலைப்பொருட்கள் போன்ற நோக்கிலும் குறிச்சொல் களஞ்சியத்தை உருவாக்கலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

7. வளங்கள் என்ற வகைப்பாட்டில், மழைவளம், நிலவளம் என்பதாகவும் உருவாக்கலாம் என்றும் ஆலோசிக்கப்பட்டு, அடுத்த குறிச்சொல் களஞ்சியத் திட்டக் கூட்டத்தை 09.09.2026 அன்று நடத்தலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் 09.09.2026 அன்று தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்கள் தலைமையில் குறிச்சொல் களஞ்சியப் பணி குறித்தக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேராசிரியர் சா. சரவணன், திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ. மணவழகன், பேரா. ம. இளங்கோவன்,பேரா. மு. சேரன், பேரா சிவ. முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முந்தைய களஞ்சிய நூல்களில் இருந்து வேறுபட்டதாக இருக்க வேண்டும்; பாட்டும் தொகையும் நூலின் விவர அடிப்படையிலும் குறிச்சொற்கள் தொகுக்கப்பட வேண்டும்; கட்டுரைத் தொடர்கள் நூல் வரிசையில் அமைதல் வேண்டும்; உள்ளுறை, இறைச்சி சார்ந்த குறிச்சொற்கள், உவமை – எதற்குரியது என்பதற்கு ஏற்ப குறிச்சொல் உருவாக்கலாம்.

எல்லாக் குறிச்சொற்களும் அகர நிரலில் இருக்க வேண்டும். குறிச்சொல் களஞ்சியச் சான்றுக்குப் புறநானூறு இரண்டாம் பாடலில் அமைந்துள்ள குறிச்சொற்கள் விவாதிக்கப்பட்டன. பகல் இருளினும் என்பதனைக் கிரகணமாகக் கொள்ளலாம் முதலிய செய்திகளைத் தலைவர் பரிந்துரைத்தார்.



## தமிழியல் தொன்மக் களஞ்சியம்

தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் 07.09.2026 அன்று தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்கள் தலைமையில் புதிய ஆய்வுத் திட்டம் சார்ந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பின்வருவோர் கலந்துகொண்டனர்.

1. பேரா. சா. சரவணன்,
2. முனைவர் ம. இளங்கோவன்,
3. பேரா. ஒப்பிலா மதிவாணன்,
4. முனைவர் சிவ. முருகேசன்



தமிழியல் தொன்மக் களஞ்சியம் என்னும் பொருண்மையில் களஞ்சியப் பணி தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. இத்திட்டப் பொருண்மையில், சங்க இலக்கியங்கள் முதல் பத்தி இலக்கியங்கள் வரை இடம்பெறும் தொன்மங்களையும் தொகுப்பில் இணைப்பது குறித்துக் கருத்தறியப்பட்டது.

## நிருவாகக் குழுக் கூட்டம்



தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்கள் தலைமையில் நிருவாகக்குழுக் கூட்டம் 11.09.2026 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிதி, நிருவாகம், திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெற்றன. 26.09.26 அன்று நடைபெறும் அறங்காவலர் மற்றும் ஆட்சிக்குழுக் கூட்டம் நடத்துதல் தொடர்பான தயாரிப்புகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

# சொல்புதிது 17

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சொல் புதிது என்னும் திட்டத்தின் பதினேழாவது கூட்டம் கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் 16.09.2026 புதன்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்றது. இக்கூட்டத்தில் இறுதி செய்யப்பெற்ற சொற்கள் பின்வருமாறு:

| வ. எண் | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|
| 1 | Narcissism | தற்செருக்கு |
| 2 | Power play | அதிகார ஆட்டம் |
| 3 | Impact player rule | தாக்கம்மிகு வீரர் விதி |
| 4 | Village tourism | சிற்றூர் உலா/ சிற்றூர்ச் சுற்றுலா |
| 5 | Tour operator | சுற்றுலா ஏற்பாட்டாளர்/ அமைப்பாளர் |
| 6 | Travel partner | பயணத்துணை |
| 7 | Media partner | ஊடகத்துணை |
| 8 | Traction Converter | இழுவை மின்மாற்றி |
| 9 | Traction inverter | இழுவை மின்னோட்ட மாற்றி |
| 10 | Glow ball | ஒளிர்பந்து |
| 11 | Primary league | முதன்மைப் போட்டித் தொடர் |
| 12 | Decision pending | நிலுவை முடிவு |
| 13 | Third umpire | மூன்றாம் நடுவர் |
| 14 | Compartment exam | துணைத் தேர்வு |
| 15 | Improvement Exam | மேம்படத் தேர்வு |
| 16 | Eddy current separator | சுழல் மின்னோட்டப் பிரிப்பான் |
| 17 | Septage | கழிவுக்குழிக் கசடு |
| 18 | Pavithrotsavam | தூய்மைத் திருவிழா |
| 19 | Duplex house | உள்மாடி வீடு |
| 20 | Barndominium | மாளிகைக் கொட்டகை |
| 21 | Pinhole Pupilloplasty centre | கண்மணி நுண்துளை சீரமைப்பு மையம் |
| 22 | Optical store | கண்ணணியகம் |
| 23 | Minus mark/ negative marking | எதிர் மதிப்பெண் |
| 24 | Skincare | தோலெழில் காப்பு |
| 25 | Lip balm | உதட்டுக் களிம்பு |

| | | |
|---|---|---|
| 26 | Totaliser | மொத்தக் கணிப்பான் |
| 27 | Air tight container | காற்றுப்புகாக் கொள்கலன் |
| 28 | Paneer palak | பாலாடைக்கீரைக் குழம்பு |
| 29 | Stylometry | நடை அளவியல் |
| 30 | Straight Drive | நேர்மட்டையடி |
| 31 | Late Cut | தாமத வெட்டடி |
| 32 | Leg Glance | கால்திசைத் தட்டடி |
| 33 | Flick Shot | சுழலடி |
| 34 | Ramp Shot | ஏறுமுகத் தட்டடி |
| 35 | Ramp Scoop | ஏறுமுகத் தூக்கடி |
| 36 | Switch Hit | மாற்றுத் தட்டடி |
| 37 | Stroke ball | அடிவாகுப் பந்து |
| 38 | smart classroom | திறன்மிகு வகுப்பறை |
| 39 | Telescopic rate | படிமுறைக் கட்டணம் |
| 40 | Telescopic ladder | மடிநீள்ஏணி |

இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமை தாங்கினார். பேராசிரியர்கள் ஒப்பிலா மதிவாணன், சா. சரவணன், மு. இரமசுவாமி, பாரதிபாலன், ம. இளங்கோவன், சிவ முருகேசன், தி. கமலி, விஜயலட்சுமி ராமசாமி, ஊடகவியலாளர் திரு. ராஜ்கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். மேற்கண்ட 40 சொற்கள் இறுதி செய்யப்பட்டன.

பிறமொழிச் சொற்களுக்கு நிகராகத் தமிழில் சொற்கள் உருவாக்கப்பட வேண்டிய சொற்களை எவரும் அனுப்பலாம்.



## சிந்தனைக் களஞ்சியம் கூட்டம்

தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் 23.09.2026 அன்று தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்கள் தலைமையில் சிந்தனைக் களஞ்சியம் தொடர்பான ஆய்வுத்திட்டக் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பின்வருவோர் கலந்துகொண்டனர்.

1. பேரா. சா. சரவணன் 2. பேரா.ஒப்பிலா மதிவாணன் 3. முனைவர் வாணி அறிவாளன் 4. முனைவர் சிவ. முருகேசன்

இக்கூட்டத்தில் சிந்தனைக் களஞ்சியத் திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்து இத்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் வாணி அறிவாளன் எடுத்துரைத்தார். தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம.இராசேந்திரன், திட்டத்தைச் செம்மையாக்குவது குறித்த ஆலோசனைகளை வழங்கினார். சங்க இலக்கியங்களில் காணலாகும் சூழலியல் சிந்தனைகள் குறித்து விளக்கப்பட்டது. திட்டச் செயல்பாடுகள் குறித்து மேற்பார்வை செய்யப்பட்டது. சங்க இலக்கியச் சமுதாயச் சிந்தனைகள் குறித்த களஞ்சியப் பணியை அக்டோபர் திங்களுக்குள் ஒப்படைப்பதாக ஒருங்கிணைப்பாளர் முனைவர் வாணி அறிவாளன் அவர்கள் கூறினார்.



## மொழி உச்சரிப்பு சார்ந்த ஆலோசனைக் கூட்டம்

தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் 30.09.2026 அன்று தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்கள் தலைமையில் தமிழ் மொழி உச்சரிப்பு நுண்ணறிவு செயலி உருவாக்கத்திற்கான திட்டம் குறித்துக் கலந்துரையாடல் நடைபெற்றது. முனைவர் து. ஜானகி (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்) அவர்களைக் கொண்டு இத்திட்டம் மேற்கொள்ளக் கருதப்பட்டது. இக்கூட்டத்தில் பின்வருவோர் கலந்துகொண்டனர்.



1. பேரா. சா. சரவணன்
2. பேரா. ஒப்பிலா மதிவாணன்
3. முனைவர் ம. இளங்கோவன்
4. முனைவர் சிவ. முருகேசன்
5. முனைவர் து. ஜானகி